# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.279/2024**

| Deposition of Name | நவீன்குமார் | Prosecution | LW-3 as PW-3 |
|---|---|---|---|
| Father Name | கோவிந்தராஜன் | Defence | --- |
| Village | திருநன்றியூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 45/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**20.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த **23.07.2024** ம் தேதி காலை **7** முதல் **7.15** மணியிருக்கும் அப்போது நான் எனது வீட்டில் இருந்தேன். ஒரே சத்தமாக கேட்டுக்கொண்டிருந்தது வெளியே வந்து பார்த்த போது ராஜேந்திரன் என்பவரை ஆஜர் எதிரி அருகில் கிடந்த கட்டையால் தாக்கினார். நான் இருவருக்கும் இடையே நடந்த சண்டையை விலக்கிவிட்டு சமாதானம் செய்து வைத்தேன். ஆனால் எதிரி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டு என் மீது புகார் கொடுத்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிக்கும் ராஜேந்திரன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. ராஜேந்திரன் என் வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் தான் அவர் உள்ளார் என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் புகார்தாரர் சண்டைக்கு முன்பு முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. ஆஜர் எதிரி வீட்டின் பக்கத்தில் காம்பவுன்டு சுவர்

உள்ளதா என்றால் உள்ளது. **VAO,** வைத்து அளக்கும் போது காம்பவண்டு சுவர் எதிரியின் உடைய இடத்தில் தான் உள்ளது என்று **VAO** கூறினாரா என்றால் கூறினார். சம்பவம் எப்போது நடந்தது என்றால் **23.07.2024** ம் தேதி காலை **7** முதல் **7.15** நடந்து என்றால் சரிதான். புகார் தாரர் **24.07.2024** ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி அரிசி வாங்கிக்கொன்டு ராஜேந்திரன் வீட்டினை கடந்து வரும்போது நானும் புகார் தாரரும் அடித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டு **Cr.No.225/2024 , CC.209/2025** உள்ளது என்றால் சரிதான். **23.07.2024** ம் தேதி ஆஜர் எதிரி நானும் ராஜேந்திரன் என்பவரும் தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்டு அரசு மருத்துவமனை மயிலாடுதுறையில் சிகிச்சையில் இருந்தாரா என்றால் நான்அவரை தாக்க வில்லை. அதன் பின் போலிசாரால் வாக்குமூலம்பெறப்பட்டு குற்ற எண். **225/2024** வழக்கு எண்.**289/2025** என வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது புகார்தாரர் கொடுத்த புகார் என்றால் சரிதான். வைத்தீஸ்வரன்கோயில் காவல் நிலையத்தில் புகார்தாரர் கொடுத்தது என்றாலும் சரிதான். அதில் ஆஜர் எதிரிக்கும் எனக்கும் சண்டை ஏற்பட்டதால் இருதரப்பையும் **23.07.2025** ம் தேதி விசாரணைக்கு காவல்நிலையத்திற்கு வருமாறு அழைத்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆஜர் எதிரி யார் யாரை தாக்கினார் என்றால் ராஜேந்திரன் மற்றும் ராஜேந்திரனின் மனைவியையும் தாக்கினார். ஆனால் என்ன கட்டையால் என்று எனக்கு தெரியாது. அவர்கள் பிறகு எங்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ஆஜர் எதிரி யாரையும் தாக்கவில்லை என்றாலும் என்னுடைய தூண்டுதலின் பேரில் தான் பொய் புகார் கொடுத்து பொய் வழக்கு

போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்மும் இல்லை என்றாலும் அவர் கொடுத்த வழக்கிற்கு எதிர் வழக்கு போட வேண்டும் என்றபதால் இந்த வழக்கை போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிவக்குமார் கொடுத்த வழக்கை சமாதானம் செய்ய வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையத்திற்கு எதிரியை அழைத்து அவர் வராத காரணத்தினால் அவர் மீது எதிர் வழக்கு போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை**.